மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அரும்பாக்கத்திலே உள்ள பேரறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் யுனானி மருந்துகள் டையபட்டீஸ்க்காக இப்போது கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மேடு கிராமத்திலுள்ள அரசு மருந்தகத்தில் அளிக்கப்படும் சித்த மருத்துவம்

362—(*வினா எண். 16955)—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் வட்டம் வாய்மேடு கிராமத்தில் உள்ள அரசு மருந்தகத்தில் சித்த மருத்துவம் மட்டுமே உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை ஆங்கிலமுறை மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இல்லை.

மேலூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய ஆம்புலன்ஸ் வண்டி வழங்கும் திட்டம்

363—(*வினா எண். 21444)—திரு. க. வே. வீராணம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் அரசு மருத்துவமனைக்குப் புதிதாக ஆம்புலன்ஸ் வண்டி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது வழங்கப்படும்?

(இ) இம்மருத்துவமனையில் மகப்பேறு படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க செயற்குறிப்பு உள்ளதா?

(ஈ) இம் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

(இ) இல்லை.

(ஈ) செயற்குறிப்புகள் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

1984 மார்ச் 20]

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள மேலூர் மிகப் பெரிய ஊர். அது பல இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற இடம். அப்படிப்பட்ட இடத்திலுள்ள அரசு மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸ் வண்டி வழங்குவதற்கான எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கின்றது. ஆகவே உடனடியாக இந்த ஆண்டிலேயாவது அதனை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மேலூரிலே உள்ள அரசாங்க மருத்துவமனை 63 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கின்றது. டென்டல், சித்தா, எக்ஸ்ரே, லேபரேட்டரி ஆகிய பிரிவுகள் எல்லாம் அங்கே செயல்படுகின்றன. ப்ளட் பேங் ஃபெசிலிட்டிஸ் அங்கே ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த வகையில் படிப்படியாக அந்த மருத்துவ மனையை விஸ்தரிக்க முடியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய கருத்து நல்ல கருத்தாக இருந்தாலும் அதுபற்றி பிறகு யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, மேலூர் அரசு மருத்துவமனை, தாலுக்கா தலைமை மருத்துவமனையாகும். அம்மாதிரி மருத்துவமனைகள் தமிழ் நாட்டில் பல இருக்கின்றன. ஆகவே தாலுக்கா தலைமை மருத்துவமனைகள் என்ற அளவிலாவது ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? இந்த ஆண்டில் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா? செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஏற்கெனவே இருக்கக்கூடிய மதுரை இராஜாஜி மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் நான் கைந்து ஆம்புலன்ஸ் வண்டிகள் இருக்கின்றன. அவை கூட ரிப்பேர் ஆகி பல மாதங்கள் ஆகி பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன. அதை எல்லாம் கண்காணித்து உடனடியாக அவற்றை பழுதுபார்ப்பதற்கும், ஆம்புலன்ஸ் இல்லாத மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதியைக் கொடுக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆம்புலன்ஸ் வண்டிகள் மட்டும் அல்லாமல் எல்லாவற்றையும் ரிப்பேர் செய்வதற்காக தனி இலாகாவை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். அதற்காக Health Transport Department என்ற தனி இலாகாவை ஏற்படுத்தி Percentage of Vehicles which are not properly maintained and which are not road worthy எத்தனை என்று பார்த்து, அந்த வண்டிகளுடைய சதவீதத்தை நாம் ஆண்டுதோறும் வெகு வேகமாகக் குறைத்து வருகிறோம். அந்த முயற்சியில் நாம் தொடர்ந்து ஈடுபடுகிறோம்.